# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை 600 006

## பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு

## பொதுத் தேர்வுகள், மார்ச் / ஏப்ரல் 2025

## தனித்தேர்வர்களிடமிருந்து தத்கல் முறையில் விண்ணப்பங்கள் வரவேற்றல்

## செய்திக் குறிப்பு

நடைபெறவுள்ள மார்ச் / ஏப்ரல் 2025, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கத் தவறிய தகுதியான தனித்தேர்வர்களிடமிருந்து, தத்கல் முறையில் இணைய தளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**தத்கல் (சிறப்பு அனுமதி) முறையில் விண்ணப்பிப்பதற்கான நாட்கள்**

ஏற்கனவே 06.12.2024 **(வெள்ளிக்கிழமை)** முதல் 20.12.2024 **(வெள்ளிக்கிழமை) வரையிலான** தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் தற்போது 23.12.2024 **(திங்கட்கிழமை)** முதல் 26.12.2024 **(வியாழக்கிழமை) வரையிலான நாட்களில் (25.12.2024 கிறிஸ்துமஸ் பண்டிகை நீங்கலாக) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை** அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையத்திற்கு நேரில் சென்று தேர்வுக் கட்டணத்துடன் **கூடுதலாக ரூ.1000/- (மேல்நிலை) / ரூ.500 (பத்தாம் வகுப்பு) சிறப்பு கட்டணமாக** செலுத்தி இணைய வழியில் தத்கல் முறையில் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களின் (Government Examinations Service centres) விவரங்கள் மற்றும் இணைய வழியில் விண்ணப்பங்களை பதிவு செய்தல் குறித்த தனித்தேர்வர்களுக்கான தகுதி மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.inஎன்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம். மேலும், இவ்விவரங்களை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலகங்கள், சம்பந்தப்பட்ட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

**தேர்வுக்கால அட்டவணை**

மார்ச் / ஏப்ரல் 2025, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான தேர்வுக் கால அட்டவணைகளை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

**ஒம்/-**
**இயக்குநர்**

**இடம்: சென்னை-6**
**நாள் :** 20.12.2024.